## தலைப்பு 250 – அரச கணக்குகள் திணைக்களம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

அரச கணக்குகள் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திணைக்கள்த்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச கணக்குகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என அறிவிக்க முடியாதிருந்தது.

(ஆ) அரச கணக்குகள் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) குறைநிரப்பு மதிப்பீடுகளினூடாக பாதிடப்பட்ட நிதியேற்பாடு 08 சதவீதம் முதல் 126 சதவீதம் வரையான வீச்சினுள் அதிகரிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளின் ஊடாக உரிய நிதியேற்பாடுகள் திட்டமிடப்பட வேண்டியமை. | 2018 ஆம் ஆண்டின்போதுபதவியணி வெற்றிடங்களை மேலதிகமாக உத்தியோகத்தர்கள் பங்குபற்ற வேண்டிய முக்கியமான செயலமர்வுகளுக்காக மேலதிக நிதியேற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தமையால் மேலதிக நிதியேற்பாடுகளை பெற நேர்ந்திருந்தது. |
| (ஆ) 02 செலவின விடயங்களுக்காக வருடாந்த பாதீட்டுமதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 400,000 ஆன மொத்த நிதியேற்பாடும் எஞ்சியிருந்தது. | - மேற்படி - | பதவிநிலை உத்தியோகத்தர்களில் பெரும்பாலானோர் உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக தமது தனிப்பட்ட வாகனங்களை பயன்படுத்துவதற்காக எதிர்பார்க்கப்பட்ட மூலதன தன்மையிலான செலவினங்கள் எழவில்லை. |
| (இ) 04 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தை மயால் நிதியேற்பாடுகளை | - மேற்படி - | உள்நாட்டு பிரயாணச் செலவினங்கள் குறைவடைதல், 2018 ஆம் ஆண்டிற்கான திட்டமிடப்பட்டிருந்த மிலோதா |

| | | |
|---|---|---|
| பயன்படுத்தியதால் சேமிப்பு, அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டின் 12 சதவீதம் முதல் 34 சதவீதம் வரையான வீச்சிலாகும். | | நிறுவனத்தினால் செயற்படுத்தப்படும் DIPPC பாடநெறியின் வெளிநாட்டு சுற்றுலாக்கள் இரத்தாகுதல், சில உத்தியோகத்தர்கள் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு பதிலாக தமது தனிப்பட்ட வாகனங்களை பயன்படுத்துதல், மிலோதா நிறுவனம் நடைமுறைப்படுத்தும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களினை இலாபமாக நடாத்துதல் மற்றும் சம்பள மென்பொருள் தொடர்பில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் இலவசமாக நடாத்துதல் போன்ற விடயங்களின் காரணமாக நிதியேற்பாடுகள் எஞ்சியிருந்தன. |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 09 வருடங்களாக முன்கொண்டுவரப்படும் மரணமடைந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 164,953 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக்கடன் மீதிகளை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கடன் மீதிகளை அறவிடுதல் தொடர்பில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| (ஆ) 05 வருட காலமாக முன்கொண்டுவரப்படும் சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து ரூபா 132,846 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | மீதியை அறவிடுதல் தொடர்பில் நீதிமன்றத்தின் வழக்கு தொடரப்பட்டுள்ளது. |

**2.3 வணிகமல்லாத முற்பணம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **நானாவித முற்பணக் கணக்கு (25003)**<br>2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நானாவித முற்பணக் கணக்கில் நிலவிய ரூபா 173,004,106 ஆன மீதி தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன. | | |
| (அ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 173,599,852 தொகையான கடன் மீதிகளில் 2019 மார்ச் வரையிலும் 09 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு போதுமானதான முன்னோடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | உரிய நிறுவனங்களுடன் நேரடியாக செயற்பட்டு தொடர்ச்சியாக பின்தொடர்தலை மேற்கொண்டு நிலுவைப் பணத்தை அறவிடுவதற்குரிய நிறுவனங்களின் அறிவுரைகள் மற்றும் உதவி வழங்கப்படும். |
| (ஆ) 2017 ஆம் ஆண்டினுள் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டினுள் திணைக்களம் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், ரூபா 14,959,629 இனை பதிவழிப்பதற்கு மாத்திரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | உப முற்பணங்களை வழங்கிய நிறுவனங்கள் ஒரே தடவையில் இணைத்துக் கொள்வதற்கு காணப்பட்ட தடையொன்றின் காரணமாக 2018 ஆம் ஆண்டினுள் கருத்திற் கொள்ளக்கூடிய அளவிலான செயன் முன்னேற்றமொன்றினை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிட்டவில்லை. |
| (இ) 2006 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்வதற்கான முற்பணங்களை பெற்றுக் கொள்வதுடன் தொடர்புடைய ஆரம்பிக்கப்பட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் நோக்கில் கடந்த 5 வருடங்களின் அறவீடுகளின் விபரங்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 10,766,151 ஆன நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | - மேற்படி - | நிலுவை மீதிகளை அறவிடுவதற்காக அரச கணக்குகள் திணைக்களத்திற்கு நேரடியாக தலையீடு செய்யும் இயலுமை இல்லாதிருந்ததுடன், தொடர்ச்சியாக பின்தொடர்தலை மேற்கொண்டு உரிய நிறுவனங்களுக்கு ஆலோசனைகள் மற்றும் உதவி வழங்கி இடை |

| | | | |
|---|---|---|---|
| | 2017 நவம்பர் 16 ஆந் திகதி அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் கதநல அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக் கிடையே நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் பிரகாரம் நிலுவை பணங்களை அறவிட முடியும் என்பதற்கான விடயங்கள் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நடுவராக மாத்திரம் செயற்படுகின்றது. |
| (ஈ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மாத்தளை மாவட்ட செயலாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 2,243,000 ஆக இருந்ததுடன், அது லக்கல பல்நோக்கு சேவைகள் கூட்டுறவு சங்கத்திற்குரியதாகும். இந்த தொகை ரூபா 5,000 ஆன தொகையான மாதாந்த தவணைகளாக அறவிடப்பட்டவாறு உள்ள போதிலும், நிறுவனம் பணத்தை அறவிட்டு நிறைவு செய்வதற்கு 37 வருடங்களை விட அதிகமாக காலம் எடுப்பதாக அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | லக்கல பல்நோக்கு கூட்டுறவு சங்கம் இயன்றளவில் பொருளாதார சிக்கல்களின் அடிப்படையில் நடாத்திச் செல்லப்படுகின்றமையால் போதியளவில் அறவிடுதல் கடினமானதென்பதை அறிவிக்கின்றேன். |
| (உ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அனுராதபுரம் மாவட்ட செயலகத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 36,533,853 ஆக காணப்பட்டதுடன், நிலுவைப் பணங்களின் அறவீட்டில் மந்தகதியொன்று உள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | இவற்றுள் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள கமநல அபிவிருத்தி நிலையத்திடம் மற்றும் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்களிடம் நிலுவை பணத்தை வழக்கு தீர்ப்பு கிடைத்த பின்னர் அறவிடமுடியாதென்பதை தெரிவிக்கின்றேன். |
| (ஊ) | 03 மாவட்ட செயலகங்களில் மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து மீளாய்வாண்டினுள் ரூபா 595,747 மற்றும் 2019 மார்ச் மாதமளவில் ரூபா 75,000 தொகை முற்பணங்களை தீர்ப்பதற்கு கிடைத்திருந்த | - மேற்படி - | கடந்த வருடத்தினுள் மாத்தளை, கண்டி மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்ட செயலகங்களால் முறைய ரூபா 60,000, ரூபா 330,000 மற்றும் ரூபா 198,480, படி முற்பணங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், அந்த நிறுனங்களிடமிருந்து மேலும் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 51,304,691 ஆகும். | | தீர்க்கப்பட்டதுடன், கமநல அபிவிருத்தி திணைக்களம் ரூபா 7,267, தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| (எ) | 2019 மார்ச் அளவில் பொலன்னறுவை மாவட்ட செயலகத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 55,927,666 தொகையான முற்பண மீதி அத் திகதியில் அறவிடப்பட வேண்டியுள்ள முற்பண மீதியில் 35 சதவீதமானதுடன் அதனை அறவிடுவதற்கு போதியளவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | பொலன்னறுவை மாவட்டச் செயலகத்தினால் தீர்க்கப்பட வேண்டிய நிலுவைப் பணம் ரூபா 55,927,66.88 ஆகும். |
| (ஏ) | 2008 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்வதற்காகமட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த முற்பணங்களில் தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியதாகவும் ரூபா 681,800 தொகையினை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | தொடர்ச்சியாக பின்தொடர்தல்களின் பிரதிபலனாக 2019 மார்ச் மாதத்தின் போது மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தினால் ரூபா 200,000 தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது. |
| (ஐ) | கொழும்பு கந்தளாயில் இடம்பெற்ற பணத் திருட்டுக்குரிய பணிப்பாளர் பிரதான மருத்துவமனை கொழும்பு இற்கு 2002 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 2,408,460 ஆன முற்பண மீதியாக அறவிடுவதற்கு 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | வழக்கொன்று விசாரிக்கப்படுவதுடன் உரிய வழக்கு நடவடிக்கைகள் நிறைவு பெற்றவுடன் இது தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது. |

### 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.3.1 ஆம் பந்தி | 2018 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு உரிய மதிப்பாய்வு அறிக்கை 2019 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

### 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் தேவைப்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை தேவைப்பாடுகளுக்கு இணங்கும் வகையில் செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டியமை | அந்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி 2019 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் அரச நிதிச் சுற்றறிக்கை 01/2014 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

### 3.2 எதிர்பார்த்த அடைவு மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பொது வைப்புக் கணக்கினை ஆரம்பித்தல் மற்றும் பொரு வைப்புக் கணக்கு | நிலுவைக்கடன் மீதிகளை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்பட | கடன் மீதிகளை அறவிடுதல் தொடர்பில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு |

| | | | |
|---|---|---|---|
| | பணிகளை இணைப்பு செய்தல் திணைக்களத்தின் பிரமான பணியொன்றாவதுடன் அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட பொது வைப்புக் கணக்குகளுக்கு 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான தீர்க்கப்படாத மீதி ரூபா 76.86 பில்லியன் ஆகும். இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | வேண்டும். | உள்ளது. |
| (i) | மாவட்ட செயலகத்திற்கான 6003 வைப்புக் கணக்கினை மூடுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான 04 கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 10,674,858 ஆன வரவு மீதி நிலவியது. | எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலனாக பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கொழும்பு மாவட்ட வரவு மீதியை தீர்ப்பதற்கு குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைய அந்த வரவு மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ii) | 243/2015 ஆம் இலக்க மற்றும் 2015 யூன் 24 ஆந் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் மூலம் பேணிச் செல்லப்படக்கூடிய வைப்புக் கணக்கு தொகுதி தொடர்பான தகவல்கள் விபரங்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதனுள் உள்ளடங்காத 6000/3 மற்றும் 6000/286 வைப்புத் தொகுதி கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 940,723 வரவு மீதி காணப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | தற்போது உரிய விடயப்பரப்பிற்கு அமைச்சுக்களுடன் கலந்துரையாடி இந்த மீதியை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| (ஆ) | தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டவாறு 62 நிறுவனங்களுக்குரிய முற்பண “பீ” கணக்குகளில் பல வருடங்களாக முன்கொண்டுவரப்படும் ஓய்வு பெற்ற, மரணமடைந்த, பணி நீக்கத்திற்கு உட்படுத்தப்பட்ட, | திணைக்களத்தின் பிரதான பணியினூடாக எதிர்பார்க்கப்பட்ட பொறுப்புக்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இதற்காக திணைக்களத்தினால் 2017 திசெம்பர் 29 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையை வெளியிடுவதற்கு மேலதிகமாக அனைத்து அமைச்சுக்கள் / திணைக்களங்களின் 5 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதி தொடர்பில் |

| | |
|---|---|
| சேவையை விட்டுச் சென்ற மற்றும் இடமாற்றங்களுக்குரிய ரூபா 301,148,736 கூட்டுத்தொகையான அறவிடப்படாத மீதிகள் காணப்பட்டன. | எடுக்கப்பட வேண்டிய மேற்படி நடவடிக்கைகள் தொடர்பில் உரிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. |